**முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான தேசிய அதிகாரசபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து அதிகாரசபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கல்லூரியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சங்கத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சங்கம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கல்லூரியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகாரசபையின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

---------------------------------------

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவுசெய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்களுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அதுதொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான

உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு “முறையாக திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக்கொள்வது அவசியமாகவுள்ளது. பொதுப் பேரேடு, நாட்குறிப்பு, நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் போன்ற பிரதான கணக்கீட்டு அறிக்கைகளை பேணிச் செல்லல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ள தலைப்புக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2016 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் நேரடியாக அதிகாரசபைக்குக் கிடைத்த ரூபா 27,982,925 தொகையான வெளிநாட்டு மானியம் மற்றும் அதில் மேற்கொள்ளப்படுகின்ற செலவினம், அதிகாரசபை ஏனைய காசு பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளைப் பதிவுசெய்கின்ற காசேட்டில் பதியப்படாமல் வெளிநாட்டு மானியங்களுக்காக பேணிச் செல்லப்படுகின்ற காசேட்டில் மாத்திரம் பதியப்பட்டிருந்ததுடன் பேரேட்டுக் கணக்குகளில் பதிவதற்கும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2016 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை கணக்குப் புத்தகங்கள் மற்றும் உறுதிச்சீட்டுக்கள் 2019 மார்ச் 27 ஆந் திகதி கணக்காய்விற்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் | சகல வெளிநாட்டு மானியங்களும் அதில் இருந்து மேற்கொள்ளப்படுகின்ற செலவினங்களும் அதிகாரசபையில் ஏனைய காசுப் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளில் பதிவு செய்யப்படுகின்ற காசேட்டில் பதியப்பட்டு பேரேட்டுக் கணக்குகளுக்கு பிரதி செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| நிதிப்பிரமாணம் 625(3) இன் பிரகாரம் இந்த வெளிநாட்டு மானியம் திறைசேரியில் வைப்புச் செய்யப்படாதிருந்ததுடன் இந்த மானியத்தை பயன்பாட்டிற்கு எடுப்பதற்கான மதிப்பீடுகளில் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் வெளிநாட்டு மானியம் திறைசேரியில் வைப்புச் செய்யப்பட வேண்டிய இருந்ததுடன் செலவினங்களுக்காக நிதியேற்பாடு ஒதுக்க வேண்டி உள்ளது. |
| கிடைக்கப்பெற்ற மானியம் மற்றும் அதன் மூலம் மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் பதியப்பட்டிருந்த காசேடு மற்றும் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் தவிர கொடுக்கல் வாங்கல்களை சான்றுறுதிப்படுத்தப்படுவதற்காக எந்தவித எழுத்துமூல சான்றும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | கொடுக்கல் வாங்கல்களை சான்றுறுதிப்படுத்துவதற்கான சகல எழுத்துமூல சான்றுகளும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 3 இன் பிரகாரம் 47 ஆம் பந்தியின் பிரகாரம் போதியளவான முன்னைய காலப்பகுதியின் தவறுகளை கண்டறிந்ததன் பின்னர் விநியோகிக்கப்படுவதற்காக அங்கீகரிக்கப்பட்ட முதலாவது நிதிக்கூற்றுத் தொகுதியில், தவறு ஏற்பட்ட காலப்பகுதிக்காக சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பீட்டு ரீதியான பெறுமதியை மீண்டும் வெளியிடுதல் பின்னோக்கிய ரீதியில் சீராக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யாமல் முன்னைய ஆண்டின் சீராக்கமாக ரூபா 16,416,251 தொகை 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகாரசபையும் நிதியத்திலும் நிதி நிலைமைக் கூற்றின் 06 விடயங்களுக்கு சீராக்கப்பட்டிருந்தது. | தற்போது இந்த விடயங்கள் தொடர்பாக கவனத்தில் கொள்ளப்பட்டதுடன் எதிர்காலத்தில் நியமத்தின் பிரகாரம் செயற்படுத்தவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். 2019 ஆம் ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது இந்த தவறு திருத்தப்பட வேண்டும். |
| (ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 14 இன் 23 மற்றும் 28 ஆம் பந்திகளின் பிரகாரம் பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் தொடர்புடைய தரப்பினர்களுடன் மேற்கொள்கின்ற கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தற்போதும் இந்தத் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக பணிப்பாளர் சபையின் அங்கத்தவர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன் அந்தத் தகவல்களைப் பெற்றுக்கொள்ளல் தற்போது மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். 2019 ஆம் ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது இந்த தவறு திருத்தப்பட வேண்டும். |
| (இ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் 19 இன் பிரகாரம் அதிகார சபையினால் ஊழியர்களின் பணிக்கொடைகளை செலுத்துவதற்காக சொத்தொன்றை ஏற்படுத்துவதற்கு ஆயுட்கால எண்ணிக்கையின் மூலம் எதிர்காலத்தில் ஊழியர்களுக்கு செலுத்துவதற்கு ஏற்படுகின்ற பணிக்கொடைகளின் தற்போதைய பெறுமதியை கணிப்பீடு செய்வதற்கும் அப்பெறுமதி சொத்துக்களின் நியாயமான பெறுமதியுடன் ஒப்பீடு செய்து ஆயுட்கால இலாபம் மற்றும் நட்டம் ஏற்படுமாயின் அப்பெறுமதியை கணக்குகளில் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பணிக்கொடைக்காக ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் ஆயுட்கால எண்ணிக்கையின் அடிப்படையில் எதிர்காலத்தில் ஊழியர்களுக்கு செலுத்துவதற்கு ஏற்படுகின்ற பணிக்கொடைகளின் தற்போதைய பெறுமதி கணிப்பிடப்பட்டு தேவையான ஏற்பாடுகளை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டி உள்ளது. 2019 ஆம் ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது இந்த தவறு திருத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஈ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 20 இன் 21 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்களை நிர்வகித்தல் மற்றும் எதிர்கால பொருளாதார நலன்களை பெற்றுக்கொள்ளும் அதிகாரம் அதிகாரசபைக்கு உரித்தாகின்ற சந்தர்ப்பங்களில் மாத்திரம் கற்பனைச் சொத்துக்கள் இனங்காணப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக மக்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது செலவிடப்பட்ட ரூபா 67,949,653 தொகை வருமான செலவினமாக இனங்காண்பதற்குப் பதிலாக கற்பனைச் சொத்தாக இனங்காணப்பட்டிருந்தது. | பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் என அதிகாரசபையின் சகல செயற்பாடுகளையும் கவனத்தில் கொள்ளும் போது செலவிடப்படுகின்ற சந்தர்ப்பத்தின் போதே பொருளாதார நலன்கள் கிடைக்கப்பெறுகின்றமையால் அது கற்பனைச் சொத்தாக இனங்காணப்பட்டிருந்தது. | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். 2019 ஆம் ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது இந்த தவறு திருத்தப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 710,408 தொகையான அட்டுறு செலவினம் கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்காக செலுத்தப்பட்ட ரூபா 715,831 தொகை மீளாய்வாண்டின் செலவினமாக இனங்காணப்பட்டிருந்தது. | எதிர்காலத்தின் போது தயாரிக்கப்படுகின்ற நிதிக்கூற்றுக்களில் உங்களின் தெரியப்படுத்தல் மற்றும் ஆலோசனையின் பிரகாரம் செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்றோம். | அட்டுறு கொள்கையின் பிரகாரம் ஆண்டிற்குரிய வருமானம் மற்றும் செலவினம் மாத்திரம் இனங்காணப்பட வேண்டும். 2019 ஆம் ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது இந்த தவறு திருத்தப்பட வேண்டும். |
| (ஆ) 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,843,385 இழிவுப் பெறுமதியுடைய கட்புல மற்றும் செவிப்புல வீடியோ படங்கள் கற்பனைச் சொத்தாக இனங்காணப்பட வேண்டிய போதிலும் அதற்குப் பதிலாக ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் இனங்காணப்பட்டிருந்தது. | எதிர்வரும் வருடங்களின் போதும் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது ஆண்டின் நாட்களின் எண்ணிக்கை 365 ஆக கணித்து பெறுமானத்தேய்வு கணிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சொத்துக்கள் சரியானதாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். 2019 ஆம் ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது இந்த தவறு திருத்தப்பட வேண்டி உள்ளது. |

### 1.5.4 அதிகாரபலமின்றிய கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2006 இன் 27 ஆம் இலக்க புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான தேசிய அதிகாரச்சட்டத்தின் 14 ஆம் பிரிவில் காண்பிக்கப்பட்டுள்ள இலக்குகளுக்கு இணங்காத செயற்பாடுகளை சுகாதாரம், போசனை மற்றும் சுதேச வைத்திய அமைச்சரிற்கு உதவி கையளித்தல் விழாவிற்காக அதிகாரசபையினால் மீளாய்வாண்டின் போது ரூபா 1,000,000 தொகை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது. | இந்த செலவினம் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் புகையிலை மற்றும் மதுசார நிவாரணத்திற்காக அரசியல் தலைவர்களை வலுவூட்டும் செயற்பாடுகள் என்ற உப செயற்பாட்டின் கீழ் செலவிடப்பட்டுள்ளது. புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான கொள்கைகளைத் தயாரிக்கும் அரசின் உயர் உத்தியோகத்தர்கள், அரசியல் தலைவர்கள் மற்றும் பொதுமக்கள் கூடியிருக்கும் கூட்டங்களில் புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான தேசிய அதிகாரசபை மேற்கொண்ட மற்றும் ஆற்ற வேண்டிய வேலைப்பகுதிகள் தொடர்பாக வெளிப்படுத்துதல், சனாதிபதி அவர்களுக்கும் பிரதமருக்கும் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறே அதிகாரசபையின் முன்னாள் தலைவர், பேராசிரியர் காலோ பொன்சேகா அவர்களினால் புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான கொள்கை மற்றும் செயற்பாடு நிலைக்குரிய விரிவுரைகளும் நடாத்தப்பட்டிருந்தன. | அதிகாரசபையின் இலக்குகளுக்கு இணங்காத செயற்பாடுகளுக்காக நிதியினைச் செலவிடுவதற்கான அதிகாரத்தை வழங்கிய செலவினத்தை உறுதிப்படுத்திய மற்றும் கொடுப்பனவுசெய்த பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து இந்தப் பணம் அறவிடப்பட வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானம் போன்றவற்றுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2006 இன் 27 ஆம் இலக்க புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான தேசிய சட்டம் | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | 3(1)(ஆ) ஆம் பிரிவு | அதிகாரசபையின் முகாமைத்துவ சபையின் அங்கத்தவர் ஒருவராக நீதி அமைச்சின் சிரேஷ்ட செயலாளருக்கு மேற்படி பதவியில் இருக்கின்ற ஒருவரை நியமிக்க வேண்டிய போதிலும் 2019 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் அந்த அங்கத்தவர் நியமிக்கப்பட்டிருக்க வில்லை. | இந்த அங்கத்தவரை நியமிக்குமாறு சுகாதார அமைச்சின் செயலாளருக்கு கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுட ன் மீண்டும் நினைவூட்டல் கடிதம் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அதிகாரச் சட்டத்துக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | 22(2) ஆம் பிரிவு | அதிகார சபையின் திரண்ட நிதியத்திலிருந்து இலங்கைக்குள்ளும் வெளியிலும் நன்கொடை, மானியம் அல்லது நன்கொடையாகக் கிடைக்கின்ற சகல பணமும் அதிகாரசபையின் பெயரிலான நிதியத்திற்கு செலவு வைக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது அரசாங்கத்தின் மானியமாகக் கிடைத்த ரூபா 47,037,360 தொகை நிதியக் கணக்கில் செலவு வைக்கப்படாமல் அதற்குப் பதிலாக அரசாங்கத்தின் மானிய கணக்கு நேரடியாக செலவு வைக்கப்பட்டிருந்தது. | அதிகாரசபை முன்னைய ஆண்டுகள் முதல் கணக்கு வைக்கப்படும் போது பின்பற்றிய திட்டமுறையின் பிரகாரம் மேற்கொண்டு இருந்ததுடன் எதிர்காலத்தின் போது அதிகாரச சபையின் நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்து சகல நன்கொடைகள், மானியம் அல்லது நன்கொடைகள் அதிகாரசபையி ன் பெயரிலுள்ள நிதியத்திற்கு செலவு வைக்க வேண்டும். |
| (ஆ) | 2003 யூன் 02 ஆந் திகதி PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவு | வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் அதிகாரசபையின் ஆண்டறிக்கையின் வரைபு அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. | ஆண்டறிக்கையின் வரைவு அறிக்கை தயாரிக்கப்பட்டுக் கொண்டு இருப்பதுடன் விரைவில் அவற்றை அனுப்புவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் ஆண்டறிக்கையி ன் வரைபு அறிக்கை நிதிக்கூற்றுக்க ளுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டம் நாளதுவரையாக்கப்பட்ட நிறுவனத்தின் நிறுவகக் கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் தற்போதுள்ள பதவியணியினர் தொடர்பான விபரம் பாதீடு, பிரதான பெறுகைகள் திட்டம், கட்டுநிதி தேவைத்திட்டம் மற்றும் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் என்பன உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் பிரதான பெறுகைத் திட்டம் என்பன உள்ளடக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 11,581 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 12,478,615 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 12,467,034 தொகையான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு ரூபா 12,902,799 தொகையான காலக்கழிவு கணக்கீடு செய்யப்பட்டமை பிரதான காரணமாக இருந்தது.